**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டம் - 2020**

உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மே 14 ஆம் திகதிய 6371–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 01 ஆம் பட்டியலின் 4.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமூகத்திற்கான சேவையை உரியவாறும் கணக்களிப்பொறுப்புடனும் வழங்குவதற்கும் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு பங்குபற்றும் மாகாணங்களிற்கு ஆதரவளிப்பதற்கும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் திறன்களை பலப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,665.63 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 100.65 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 12,222.41 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. ரூபா 4,220.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 23.65 மில்லியன் மிகுதி தொகை ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான

குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

| பேரேட்டுக் கணக்கு | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் விபரம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வங்கியிலுள்ள காசு (உள்ளூராட்சி சபையின் 134 ஆம் இலக்கம்) | 47.62 | இல்லை | வங்கி உறுதிப்படுத்தல் | கருத்துரை வழங்கப்படவில்லை | வங்கி உறுதிப்படுத்தலுடன் இணங்க வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 2.3.3 (இ) பந்தி | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக வடமத்திய மற்றும் ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்கள் பிரதிப் பணிப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டு சம்பளங்களாக ரூபா 963,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக பிரதம செயலாளர் செயற்பட்டிருந்தாரா என்பதைக் கண்டறியுமாறு செயற்திட்ட பணிப்பாளரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு முரணாக செலுத்தப்பட்ட சம்பளங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் இரண்டு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ | ஆண்டொன்றில் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | . | ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நி.பி. 626 | வருடாந்த கணக்கைத் தயாரிப்பதற்கு வசதியளிக்கும் பொருட்டு இரட்டை பதிவு அடிப்படையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். எனினும் அத் தேவைப்பாடுகள் மாகாண அதிகாரசபையால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | மாகாண அமுப்படுத்தல் பிரிவுகளிற்கு சீர்செய்வதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுடன் இணங்க வேண்டும். |
| (உ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 2.9.2 ஆம் பந்தி | முறையான வரவுச் சான்றிதழ் பெறப்படாமல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுக்கு ரூபா 117,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுடன் இணங்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட அமுலாக்கல் திட்டங்களின் பிரகாரம் உள்ளூர் சேவைகள் வழங்கல் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு 04 மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி சபைகளிற்கு செயற்திட்டம் ஆதரவளிக்க வேண்டும். எவ்வாறாயினும், உப செயற்திட்டங்களுக்கு முறையான அனுமதி பெறப்படாமல் 04 மாகாண சபைகளுக்கு ரூபா 283.82 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சரியான அங்கீகாரத்தின் அடிப்படையில் உபகட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது. | உப செயற்திட்டங்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உப செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு உள்ளூராட்சி சபைகளுக்கான செல்வாக்கை செலுத்த செயற்திட்டம் தேவைப்படுகின்றது. |
| (ஆ) | செயற்திட்ட நிதி உடன்படிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி பங்குபற்றல் அபிவிருத்தி திட்டத்தின் (எல்ஏபிடிபி) முன்னுரிமை ஒழுங்கில் உப செயற்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டிய | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன் உடன்படிக்கையில் உள்ள வழிகாட்டலின் பிரகாரம் உப செயற்திட்டம் தெரிவுசெய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் மேற்படி முன்னுரிமைப் பட்டியலின் பிரகாரம் உப செயற்திட்டங்களைத் தெரிவு செய்ய வேண்டாம் என செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு மாகாண அமுல்ப்படுத்தல் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளது. | | |
| (இ) | செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செயலாற்றல் மானியக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் எந்த அளவுகோல்களும் (criteria) அறிமுகப்படுத்தப்படாத காரணத்தினால் உள்ளூராட்சி சபைகளுக்கான செயலாற்றல் மானியக் கொடுப்பனவை ஆரம்பிக்க முடியாதிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டின் போது ரூபா 70 மில்லியன் ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயலாற்றல் மானியத்திற்கான அளவுகோல்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்கள்**

செயற்திட்ட செயற்பாட்டு கைநூலின் 2.12 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கைகள் 2021 யூன் 30 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| இல. | செயற்பாடு | ஆரம்பிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | தாமதம் (மாதங்கள்) | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| (i) | உள்ளூராட்சி சபைகளின் பெறுகைக் கைநூலை நாளதுவரையாக்கி அவற்றை உள்ளூராட்சி சபைகளிற்கு சுற்றறிவித்தல். | 2019 ஏப்ரல் 30 அளவில் | 20 | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பலவீனங்கள் |
| (ii) | முகாமைத்துவ தகவல் முறைமைகள் (எம்ஐஎஸ்) ஆலோசனையாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் | 2019 ஆகஸ்ட் 31 அளவில் | 16 | |
| (iii) | உள்ளூராட்சி சபை பகுதிகளில் குறை தீர்த்தல் தகவல் பொறிமுறையை நிறுவி பரப்புதல் | 2019 ஆகஸ்ட் 31 அளவில் | 16 | |
| (iv) | எஸ்எல்ஐஎல்ஜீ இற்கான வடிவமைப்பு ஆலோசனையாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் | 2019 ஆகஸ்ட் 31 அளவில் | 16 | |
| (v) | வருடாந்த செயலாற்றல் | 2019 ஆகஸ்ட் 31 | 16 | |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடுகளுக்கான ஆலோசனையாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் | அளவில் | |
| (vi) | பொருளாதார உட்கட்டமைப்பின் கீழ் முதலீடுகளுக்கான விரிவான வடிவமைப்புகளை தயாரித்து அங்கீகரித்தல் (அனைத்து மாகாணங்களிலும் முதலீடுகளுக்கான கருத்தியல் மற்றும் விரிவான வடிவமைப்புக்கள்) | 2019 திசெம்பர் 31 அளவில் | 12 |
| (vii) | பொருளாதார உட்கட்டமைப்பு முதலீடுகளுக்காக கேள்வி கோரி ஒப்பந்தத்தை வழங்குதல் | 2019 மார்ச் 31 அளவில் | 21 |
| (viii) | எம்ஜஎஸ் அடிப்படையிலான கணக்கீடு, சொத்து இருப்பு முகாமைத்துவம், குடிமக்கள் கருத்து மற்றும் குறை தீர்த்தல் பொறிமுறையை அறிமுகப்படுத்துதல். | 2019 யூன் 30 அளவில் | 18 |

**முகாமைத்துவத்தின் பதில்கள்** கருத்துரை வழங்கப்படவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** செயற்பாடுகள் இயன்றளவு விரைவாக தொடங்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாக கைநூலில் உள்ள செயற்பாடுகளின் பட்டியலை புதுப்பிக்க வேண்டும்.

### 3.3 பூர்த்தி செய்யப்படாத ஆலோசனை பணி

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| இயலளவைக் கட்டியெழுப்புதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய பணிகளை 2020 சனவரி 10 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு நான்கு ஆலோசனையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு ரூபா 3.69 மில்லியன் பகுதி கொடுப்பனவு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேலே குறிப்பிட்ட ஆலோசனைப் பணிகளை முறையாக பூர்த்தி செய்வதற்கு செயற்திட்ட பணிப்பாளரால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தி செய்யப்படாத வேலை பயன்படுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 வரை வட மத்திய மாகாணம், வட மாகாணம் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளால் LAPDPs ஐ தயாரிப்பதற்காக ரூபா 4.93 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளால் LAPDPs ஐ தயாரிப்பதற்காக மிக உயர்ந்தளவு முன்னுரிமைப்படுத்தப்பட்ட உப செயற்திட்டங்களை தெரிவு செய்யத் தவறியதன் காரணமாக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமொன்றாக கருதப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன் உடன்படிக்கையிலுள்ள வழிகாட்டலின் பிரகாரம் உப செயற்திட்டம் தெரிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில்நுட்பத்துடன் சேர்ந்த பெறுகை, பொது நிதி முகாமைத்துவம், உள்ளூராட்சி சபை பங்குபற்றல் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகியவற்றிற்காக நியமனம் செய்யப்பட்ட நான்கு ஆலோசகர்களிற்கு ரூபா 6.47 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த காலத்தினுள் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக இச் செலவினம் பயனற்றதாகியிருந்தது. | பூர்த்தி செய்யப்படாத வேலை பயன்படுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது முழு நேர செயற்திட்ட பணிப்பாளருடன் நிறுவப்பட்டிருக்காததுடன் பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தவறியிருந்தது. எனினும், செயற்திட்ட தயார்படுத்தல் பணிகளுக்காக நியமனம் செய்யப்பட்ட பதவியணியினர் பகுதி நேர | சனாதிபதி தேர்தலினாலும் நிதி அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை வழங்கப்பட்டதாலும் நியமனம் செய்யப்பட முடியாதிருந்தது. | பிரத்தியேக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவை ஸ்தாபிப்பதற்கும், செயற்திட்ட பதவியணியினரை முழு நேர அடிப்படையில் இயன்றளவு விரைவாக நியமனம் செய்வதற்கும் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்தனர். | | எடுக்கப்பட வேண்டும். |

**3.6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 04 மாகாண சபைகளுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடிய பின்னர், மாகாண சபைகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். | உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு மற்றும் வேலைத் திட்டம் என்பன வழிநடாத்தல் குழுவிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வேலைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன வழிநடாத்தல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டதை தயாரித்து அதற்கான அங்கீகாரத்தை வழிநடாத்தல் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2020 பெப்ரவரி 17 ஆம் திகதிய டிஎம்எஸ்/0049 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பகுதி நேர செயற்திட்ட பதவியணியினரிற்கு விடுமுறை கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் வடமத்திய மாகாணத்தில் உள்ள பதவியணியினரிற்கு ரூபா 480,995 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |